# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13.11.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா யூனுஸ் -ன் 63 முதல் 65 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

**அலா இன்ன அவ்லியா அல்லாஹி லா ஹவ்ஃபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன். அல்லஸீன ஆமனூ வகானூ யத்தகூன். லஹுமுல் புஷ்ரா ஃபில் ஹயா[த்]தித் துன்யா வஃபில் ஆஹிரத். லா [த்]தப்தீல லிகலிமா[த்]தில்லாஹ். ஸாலிக ஹுவல் ஃபவ்ஸுல் அலீம்.**

பொருள்: கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்தப் பயமும் ஏற்படாது; அவர்கள் கவலையடையவுமாட்டார்கள்.

அவர்கள் நம்பிக்கை கொண்டு (எப்போதும்) இறைவனுக்கு அஞ்சுபவர்களாய் இருக்கின்றனர்.

அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் (இறைவனிடமிருந்து) நற்செய்தி உள்ளது. அல்லாஹ்வின் திருவசனங்களில் எந்த மாற்றமும் இல்லை. அந்த மாபெரும் வெற்றி இதுவேயாகும். (10:63-65)

இந்த வசனத்தில் அல்லாஹ், அவனது அவ்லியாக்களைப் பற்றி குறிப்பிடுகின்றான். அவர்களுக்கு எந்தப் பயமும் இல்லை. மேலும் கவலையும் இருக்காது.

அடுத்த வசனத்தில், அவர்கள் ஈமான் கொள்பவர்களாகவும், வளர்ச்சி பெறுபவர்களாகவும், தக்வாவில் முன்னேறுபவர்களாகவும் இருப்பர் என்று கூறுகின்றான்.

பிறகு அல்லாஹ்வின் வலிமார்களுக்கு இவ்வுலகிலும் அல்லாஹ்வின் நற்செய்தி கிடைக்கிறது. மறுவுலகிலும் நற்செய்தி கிடைக்கிறது. இந்த வெகுமதியை அல்லாஹ் தனது வலிமார்களுக்கு வழங்குகின்றான்.

உண்மையான மூஃமினுக்கு இறைவனது தொடர்பின் காரணத்தால் துன்பங்கள், பிரச்சனைகள் ஏற்படும்போது நிரந்தரமான நஷ்டம் எதுவும் ஏற்படுவதில்லை. ஆபத்துகள் ஏற்படலாம்; சோதனைகளைக் கடக்க நேரிடலாம். ஆனால் ஒரு உண்மையான மூஃமினுக்கு இவ்வுலகில் எந்தவகை உலகியல் நஷ்டம் ஏற்பட்டாலும் அல்லாஹ் தனது அருளால் அதனை முழுமை செய்து விடுவான். அப்படியே அவர்களுக்கு உயிர் சேதம் ஏற்பட்டாலும் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப மறுவுலகில் அருளை வழங்கி விடுவான்; மூஃமின்களின் சிந்தனையிலும் வராத அருள்களை வழங்கி விடுவான்.

அல்லாஹ்வுடைய நட்பிற்குரிய கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்பை மட்டும் அல்லாஹ் விதித்துள்ளான். உலக நட்பின் காரணமாக நாம் சில வேளை பெரும் பெரும் தியாகம் கூட செய்து விடுகிறோம். அல்லாஹ்வுடைய நண்பன் என்று கூறுவதற்கு அதன் கடமைகளை சரியாக நிறைவேற்றுவது மட்டுமின்றி எப்போதும் லப்பைக் என்று கூறியவாறு அமல் செய்யவும் வேண்டும்.

இது நடைபெறும் போது அந்த வலிமார்கள் பயத்தை விட்டு வெளியில் வந்து விடுகிறார்கள். அல்லாஹ்வின் நட்பை இழந்து விடக்கூடாதே என்ற பயம் அவர்களை உலகிலுள்ள எல்லா தொடர்புகளிலிருந்தும் பாதுகாத்து விடும்.

இமாம் ராகிப் எழுதுகிறார்கள்: அல்லாஹ்வுடைய பயம் என்பதன் பொருள், பாவங்களிலிருந்து தப்பிப்பதும், அவனது கட்டளைகளுக்கு கட்டுப்படுவதும், முழுமையான கீழ்படிதல் மற்றும் இபாதத்தில் கவனம் செலுத்துவதும் ஆகும். அவ்லியா அல்லாஹ் (இறை நேசர்) என்ற அந்தஸ்து வீணே கிடைப்பதில்லை.

**அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:**

**த[த்]தஜாஃபீ ஜுனூபுஹூம் அனில் மலாஜிஇ யத்வூன ரப்பஹூம் ஹவ்ஃபவ் வதமஅவ் வமிம்மா ரஸக்னாஹூம் யுன்ஃபிகூன்** – (நம்பிக்கை கொண்டவர்களாகிய) அவர்களின் விலாப்புறங்கள், அவர்களின் படுக்கைகளிலிருந்து (தஹஜ்ஜுத் தொழுகையினை நிறைவேற்றுவதற்காக) விலகிவிடுகின்றன. அவர்கள் தங்கள் இறைவனை (அவனது தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக) அச்சத்துடனும் (அவனது அருளைப் பெற வேண்டுமென்று) பேரார்வத்துடனும் அழைக்கின்றனர். மேலும் நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து (இறை வழியில்) அவர்கள் செலவு செய்கின்றனர். (32:17)

அல்லாஹ் தனது அவ்லியாவின் பயத்தை நீக்கக் காரணம் அவர்களுக்கு அல்லாஹ்வின் பயம் அதிகமாக இருப்பதனால் ஆகும்.

உலகியல் பயத்தைப் பற்றி அவர்கள் ஓர் அணு அளவும் சிந்திப்பதில்லை. வருங்கால பயம் எதுவுமே இருக்காது என்பதன்று. மாறாக இறைவனது திருப்தி அவர்களுக்கு கிடைக்கும். அவர்களுக்கு மென்மேலும் இறைவன் ஆறுதல் வழங்குவான். **வலாஹூம் யஹ்ஸனூன்** – கடந்த காலத்தில் நடந்ததைப் பற்றியும் அவர்கள் கவலைப்படுவதில்லை.

அல்லாஹ் ஒருவரின் கடந்தகால பாவங்களை மன்னித்து தமது வலி ஆக ஆக்கும் போது கடந்த கால நிகழ்வுகளினால் ஏற்படும் அதிர்ச்சிகள் கவலைகளையும் கூட அவர்களை விட்டு அகற்றி விடுகிறான்.

அல்லாஹ் ஒருவரை தனது நண்பனாக்கும் போது அடியானும் நட்பின் உரிமையை வழங்கி வந்தால் இறைவன் வருங்காலத்தில் வழங்கப் போகின்ற அருள்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற அதே வேளையில் சென்றகால பாவங்களின் தாக்கத்தைப் பற்றியும் உத்தரவாதம் அளித்து விடுகிறான். உலகின் எந்த ஆற்றலும் இத்தகைய ஒரு உத்தரவாதம் தர இயலாது.

நமது இறைவன் எத்தகையவன்? எத்துணை ஆற்றல் உள்ளவன்! அவனுடன் தொடர்பு வைப்பது கொண்டு மனிதன் எல்லாவிதமான பயம் கவலைகளிலிருந்தும் முற்றிலும் சுதந்திரமானவன் ஆகிவிடுகிறான்.

ஆனால் பரிதாபம்! உலகின் பெரும்பகுதி இறைவனின் அந்த வாசலை விட்டு விட்டு மற்றவற்றின் பக்கம் வீழ்ந்து கிடக்கின்றனர். அது மட்டுமல்ல. இறைவனோடு பகைமையைக் காட்டுகின்றனர். இறைவனுக்கு எதிராக புத்தகங்கள் எழுதப்படுகின்றன.

அல்லாஹ்வின் இருப்பு பற்றியே விவாதம் செய்யப்படுகின்றது. உலகின் பெரும் பகுதி இதனைப் பற்றி சிந்திக்கக்கூட விரும்பவில்லை. இதன் விளைவாக மனிதன் நெருப்பின் படுகுழியை நோக்கி விரைந்து முன்னேறுகிறான். எனவே இது மிகவும் பயப்படக்கூடிய இடமாகும். மிகவும் கவனமும், இஸ்திக்ஃபாரும் தேவைப்படுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் **லா கவ்ஃபுன் அலைஹிம் வலாஹூம் யஹ்ஸனூன்** – அவர்களுக்கு பயமும் இல்லை. கவலைப்படவுமாட்டார்கள் என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள். இறைவன் அவரை தனது வலி என்று கூறிவிட்டான். ஆனால் அவருக்கு எவரிடமிருந்தும் எந்த தேவையும் இல்லை. வேறு எந்த நட்பும் அவருக்கு இன்றியமையாததாக இருப்பதில்லை. எனவே **வலம் யகு(ன்)லஹூ வலிய்யு(ம்) மினஸ்ஸுல்லி** – அவனின் ஆற்றலின்மை காரணமாக அவனுக்கு நண்பர் ஆனவரும் எவருமில்லை (17:112) என்பது மிகவும் உண்மையாகும். இறைவன் தன் தேவைக்காக யாரையும் வலி ஆக்குவதில்லை. மாறாக தனது அருளால் ஒருவரை வலி

ஆக்குகின்றான். அவனுக்கு எந்த நட்பின் தேவையும் இல்லை. நட்பின் நெருக்கத்தால் மனிதனே பயனடைகிறான்.

நினைவில் கொள்ளுங்கள். இறைவன் விரும்புவது, நெருக்கம் கொள்வது அனைத்தையும் மனிதனது முயற்சி, இறை தேட்டம் ஆகியவற்றைப் பார்த்து இறைவனே வழங்குவதாகும். கடந்தகாலங்களில் அம்மனிதரிடம் சில கூடுதல் குறைவுகள் இருக்கலாம். மனிதன் தனது கடந்த கால வாழ்வில் சிறிய, பெரிய பாவங்கள் செய்திருக்கலாம். ஆனால் இறைவனுடன் உண்மையான தொடர்பு ஏற்படும் போது அவரது எல்லா தவறுகளையும் மன்னித்து விடுகிறான். ஒரு பாவியான மனிதன் தனது வாழ்வின் சிறியதும் பெரியதுமான பல பாவங்களை செய்து விடுகிறான். இறைவனுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டால் இறைவன் அவரது முந்தைய பாவங்களை மன்னித்து விடுகிறான். பிறகு அம்மனிதனை உலகிலும் சரி, மறுவுலகிலும் சரி ஒருபோதும் தலை குனிய வைப்பதில்லை.

இது எத்தகைய கருணை! அவன் ஒருமுறை ஒருவரை மன்னித்து விட்டான் என்றால், பிறகு அவர் செய்த பாவங்களைப் பற்றி அவன் பேசுவதே இல்லை. அவற்றை மறைத்து விடுகிறான். மனிதன் இத்தனைக்குப் பிறகும் தனது துர்பாக்கியத்தால் நயவஞ்சகத்தனமான வாழ்க்கை வாழ்ந்தால் அதற்கு அவனே பொறுப்பாளியாவான்.

பரக்கத்துகள், இறை அருள்களைப் பெறுவதற்கு உள்ளத்தூய்மை மிகவும் தேவையான ஒன்றாகும். எதுவரை உள்ளம் தூய்மை அடையவில்லையோ அதுவரை அவரிடம் ஒன்றுமே இல்லை. உள்ளத்தின் எந்த மூலையிலும் சிறு நயவஞ்சகமும் இருக்கக் கூடாது. இந்நிலை ஏற்படும் போது இறைத் தோற்றம் அவருக்கு கிடைக்கிறது. மனித உள்ளத்தில் எந்த வகையான நயவஞ்சகத்தனமான எண்ணமும் இருக்கக் கூடாது. மனிதன் பற்று, விசுவாசமுள்ளவனாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் உண்மையை, சத்தியத்தை இறைவன் முன் நிலைநாட்டியிருந்தார்கள். அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் உண்மையின் நிலையை, சத்தியவானின் நிலையை நிலைநாட்டியுள்ளார்கள். இதனை ஒரு மனிதன் தன் வாழ்வில் நிலைநாட்டினால் அம்மனிதனின் வாழ்வு அருளுக்குரிய வாழ்வாகி விடுகிறது. அத்தகைய மனிதனின் வாழ்வில் எந்த இழிவும் ஏற்படுவதில்லை. அல்லது வாழ்வாதாரத்தின் சிக்கல்களிலும் பீடிக்கப்படுவதில்லை. மாறாக அவர் மீது இறைவனது அருளின் வாசல் திறக்கப்படுகின்றது. அவரது வேண்டுதல்களுக்கு பதில் அளிக்கிறான். சபிக்கப்பட்ட வாழ்வை அல்லாஹ் அவருக்கு ஒருபோதும் வழங்குவதில்லை. மாறாக அவருக்கு நல்ல முடிவை வழங்குகிறான்.

சுருக்கம் என்னவென்றால், இறைவனுடன் உண்மையான தொடர்பு வைத்திருப்பவரின் எல்லா விருப்பங்களையும் இறைவன் நிறைவேற்றி விடுகின்றான். அவரை செயலிழந்தவராக விட்டுவிடுவதில்லை.

பிறகு நான் ஓதிய வசனங்களுள் ஒரு வசனம், **அல்லஸீன ஆமனூ வகானூ யத்தகூன்** – ஈமான் கொண்ட அம்மக்கள் தக்வாவின்படி நடப்பவர்களாகவும் இருப்பர். இவர்களும் அல்லாஹ்வின் வலி ஆவார்கள். எனவே அல்லாஹ்வின் வலிமார்களின் சிறப்புப் பண்பாகும். அவர்கள் ஈமானில் வளர்ச்சி பெறுபவர்களாகவும் தக்வாவின் உயர்ந்த முன்மாதிரி காட்டுபவர்களாகவும் இருப்பர்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

கியாமத் நாளில் அல்லாஹ்வின் வலிமார்கள் கொண்டு வரப்படுவர். அவர்கள் இறைவன் முன் நிறுத்தப்படுவர். அவர்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுவர். **அவர்களுள் ஒரு பிரிவினரிடம் இறைவன் கேட்பான்.** என்னுடைய அடியார்களே! நீங்கள் என்ன காரணத்திற்காக நற்செயல்களை செய்தீர்கள்?

**அந்த வலிமார்கள் கூறுவர்.** என் இறைவா! நீ சொர்க்கத்தைப் படைத்துள்ளாய். அதில் மரங்களையும், அம்மரங்களில் பழங்களையும் உருவாக்கியுள்ளாய். ஆறுகளையும் ஓடச் செய்துள்ளாய்.

இன்னும் பல அருள்களை உனக்கு கட்டுப்பட்டவர்களுக்காகவே உருவாக்கியுள்ளாய். நான் இவற்றையெல்லாம் பெறுவதற்காக இரவில் எழுந்தேன். நஃபில் தொழுதேன். பகலில் நோன்பு நோற்றேன்.

**உடனே இறைவன் கூறுவான்.** எனது அடியார்களே! எனது சொர்க்கத்தில் நுழைவதற்காக நற்செயல் செய்தீர்கள். நீங்கள் எனது சொர்க்கத்தில் நுழையுங்கள். எனது அருளால் நான் உங்களை நெருப்பிலிருந்து விடுவித்தேன். மேலும் எனது அருளால் தான் உங்களை சொர்க்கத்திலும் நுழையச் செய்வேன். உடனே அவர்களும் அவர்களின் உடனிருப்பவர்களும் சொர்க்கத்தில் நுழையச் செய்யப்படுவர்.

பிறகு **அவர்களுள் இரண்டாவது வகையினர்களான வலிமார்களின் பிரிவினரிடம் அல்லாஹ் கேட்பான்.** எனது அடியார்களே! நீங்கள் என்ன காரணத்திற்காக நற்செயல் செய்தீர்கள்? அப்போது அப்பிரிவினர் கூறுவர். என் இறைவா! நீ நரகத்தை படைத்தாய். அதிலிருந்து சூடான கங்குகளையும், வெப்பக் காற்றையும் உருவாக்கினாய். உனக்கு கட்டுப்படாதவர்களான எதிரிகளுக்காக நீ படைத்துள்ள இவற்றை நினைத்து பயந்துதான் இரவில் எழுந்து நஃபில் தொழுதோம்; பகலில் நோன்பு நோற்றோம்.

**உடனே இறைவன் கூறுவான்:** எனது அடியார்களே! எனது நெருப்பின் மீது கொண்ட பயத்தால் இதையெல்லாம் செய்தீர்கள். எனவே இப்போது நான் உங்களை எனது நெருப்பிலிருந்து விடுவித்து விட்டேன். எனது அருளால் உங்களையும் நான் சொர்க்கத்தில் சேர்ப்பேன். உடனே அவர்களும் தமது உடனிருப்பவர்களுடன் சொர்க்கத்தில் நுழைவர்.

**வலிமார்களின் மூன்றாவது பிரிவினரிடம் இறைவன் அவர்களின் ஒரு பிரதிநிதியை வரவழைத்து விசாரிப்பான்.** எனது அடியாரே! நீர் என்ன காரணத்திற்காக நற்செயல் செய்தீர்கள்? அவர் கூறுவார். எனது இறைவனே! உன்னைச் சந்திக்கும் ஆவலில் உனக்காகவே நற்செயல்கள் செய்தேன். உனது கண்ணியத்தின் மேல் ஆணை! நான் இரவில் விழித்திருப்பது, பகலில் நோன்பு நோற்றது எல்லாமே உனது அன்பு, நேசத்தால் மட்டுமே.

**அருளுக்குரியவனும் உன்னதமானவனுமாகிய இறைவன் கூறுவான்:** எனது அடியானே! உனது இந்த வேலைகளையெல்லாம் என் மீது கொண்ட அன்பினால் செய்தாய். இதோ அதன் பிரதிபலனை பெற்றுக் கொள் என்று கூறியவாறு தனது சிறப்பான தோற்றத்தை அவருக்குக் காட்டுவான். எல்லா திரைகளையும் தன் முகத்திலிருந்து அகற்றி தன்னை காட்டுவான். அவருக்கு அருகில் வருவான். அவரிடம் எனது அடியாரே! இதோ என்னை எடுத்துக் கொள். நான் உனது அருகில் வந்து விட்டேன். நான் எனது அருளால் உன்னை நெருப்பிலிருந்து விடுவித்தேன். சொர்க்கத்தையும் உனக்கு அனுமதித்தேன். மலக்குகளை நன் உன்னிடம் அனுப்புவேன். நானும் அங்கு உனக்கு எனது ஸலாமை அனுப்புவேன். நீர் உன்னுடன் இருப்பவர்களுடன் சொர்க்கத்தில் நுழைவீர்.

இந்த மூன்று வகை பிரிவினரும் அமல் செய்தனர். மூன்று பிரிவினரையும் தனது வலிமார்களின் கூட்டத்தில் சேர்த்து விட்டான்.

இப்னு கஸீரின் இந்த நபிமொழி விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் தனது தஃப்ஸீரே கபீரில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நபிமொழியில் அவ்லியாக்களின் பல்வேறு வகைகள் விளக்கப்பட்டுள்ளன.

ஒரு பிரிவினர் ஜன்னத்தின் மீது ஆசை கொண்டு அதனைப் பெறுவதற்காக அமல் செய்தனர். இரண்டாவது பிரிவினர் நரகின் மீது பயம் கொண்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக அமல் செய்தனர். மூன்றாவது பிரிவினர் இறைவன் மீது கொண்ட நேசத்தில் தன்னை மாய்த்துக் கொண்டவர்கள். இந்த மூன்று பிரிவினர்களுக்கும் அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைவதற்கு அனுமதி வழங்கி விட்டான். பிறகு அவர்களிடம் கூறினான். இவ்வாறு உங்களை சொர்க்கத்தில் நுழையச் செய்தது உங்கள் செயல்கள் அல்ல. மாறாக எனது அருளால் உங்களை சொர்க்கத்தில் நுழையச் செய்தேன் என்று கூறினான். பிறகு இதில் ஒவ்வொரு

பிரிவிலிருந்தும் ஒருவர் வந்து அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக் கொண்டு தத்தமது கூட்டத்தாருடன் சொர்க்கத்தில் நுழைந்தனர். கடைசியில் இறைவனது அன்பில் தம்மை மாய்த்துக் கொண்ட கூட்டம் நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூட்டமாகவே இருக்கும்.

வஃபாத் நேரத்திலும் கூட அவர்களின் வாயிலிருந்து **ஃபிர் ரஃபீகில் அஃலா, ஃபிர் ரஃபீகில் அஃலா** – எனது உயரிய நண்பனிடம் என்ற சொற்கள் தான் வெளிவந்தன என்று பல்வேறு அறிவிப்புகளில் இருந்து தெரிய வருகிறது.

இந்த வார்த்தையை மரண வேளையிலும் கூறியதிலிருந்து அவர்கள் அல்லாஹ்வின் நேசத்தையே பெரிதும் விரும்பியிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. அத்தகைய தகுதி பெற்றவர்களுள் பெரும் உன்னத ஸ்தானம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸ்தானம் ஆகும்.

வலிமார்களின் பெரும் அடிப்படை விஷயம் தக்வாவில் முன்னேறுவதாகும். நபிமார்கள் அல்லாஹ்விடம் முழுமையான தக்வா உடையவர்களாகவும், முன்மாதிரியாகவும் திகழ்ந்தனர். அதற்கு ஒப்பற்ற உதாரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாவார்கள்.

அல்லாஹ்வின் வலிமார்கள் யார்? அவ்வாறு அழைக்கப்படத் தகுந்தவர்கள் யார்? என்பது குறித்து பல்வேறு ஹதீஸ்களில் வருகின்றன. எவ்வாறு இந்த ஸ்தானத்தை பெறுவது என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலில் ஒரு ஹதீஸ் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமுவிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை ஒருவர் கேட்டார். அல்லாஹ்வுக்காக ஒருவரை நேசிக்கவும், அல்லாஹ்வுக்காகவே ஒருவரை வெறுப்பதும் ஆகிய நற்குணம் எவரிடம் இல்லையோ அவர்கள் தூய்மையான ஈமான், களங்கமற்ற ஈமான் உடையவர்களாக முடியாது.

ஒருவர் இறைவனுக்காக ஒருவரை நேசித்து இறைவனுக்காக ஒருவரை வெறுக்கிறார் எனில், அவர் இறைநட்பின் உரிமையை வழங்கியவராவார்.

மேலும் கூறினார்கள்: எனது அடியார்களில் எனது நண்பராகவும், எனக்கு மிகவும் பிரியமானவராகவும் இருப்பவர் எவரெனில், அவர் என்னை நினைவு கூறுகிறார். நான் அவரை நினைவு கூறுகிறேன்.

இந்த ஹதீஸில் களங்கமற்ற ஈமானுக்குரிய அடையாளம் கூறப்பட்டுள்ளது. அத்தகைய மனிதனின் ஒவ்வொரு அமலும் அம்மனிதன் தன் சக மனிதர்களிடம் கொள்கின்ற அன்பு, வெறுப்பு கூட இறைவனின் திருப்திக்காகவே ஆகி விடுகின்றது. சுய கர்வம் அல்லது சுய பகைமையால் எதுவும் செய்வதில்லை. மனிதன் இது குறித்து தன் நிலையை ஆய்வு செய்தால் பயந்து போய் விடுவான். நான் இறைவனின் திருப்தியைப் பெறுபவன் என்று மனிதன் வாதம் செய்கிறான். அவர்களுள் பெரும்பாலரின் உள்ளத்தில் சுய கர்வமும் பெருமையுமே நிரம்பியுள்ளது. ஒருவரிடம் ஏதாவது தவறைக் கண்டால் அவரை மன்னிப்பதில்லை. அல்லாஹ்வின் திருப்தி கிடைத்து விட்டதென்றால், அவரது ஒவ்வொரு செயலும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காகவே ஆகி விடுகிறது. பிறகு இறைவனும் நண்பனாகி விடுகிறான்.

இன்னொரு ஹதீஸ் முஸ்னத் பின் ஹம்பலில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ் உங்களிடம் மூன்று விஷயங்களை விரும்புகின்றான். மூன்று விஷயங்களை வெறுக்கின்றான். நீங்கள் அவனுக்கே இபாதத் செய்ய வேண்டும். அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது என்று விரும்புகிறான். உங்களை யாருக்கு பொறுப்பாளி ஆக்கினானோ அவர்களுக்கு நல்லது செய்யுங்கள். அல்லாஹ்வின் கயிற்றை வலுவாகப் பற்றிப் பிடியுங்கள். பிரிந்து போய் விடாதீர்கள். வீண் பேச்சு, வீண் விஷயம், ஊதாரித்தனம், தேவையில்லாமல் அதிகமாக கேள்விகள் கேட்பது ஆகியவற்றை வெறுக்கின்றான்.

அல்லாஹ்வை இபாதத் செய்வது ஒவ்வொருவருக்கும் கடமையாகும். இதில் பர்ளான இபாதத்துகளும் அடங்கும். நஃபில் இபாதத்துகளும் அடங்கும். இபாதத்தில் எவர் கவனம் செலுத்துவதில்லையோ அவர் வலியாக முடியாது. அதுமட்டுமல்ல ஒரு முஃமினாகவும் ஆக முடியாது. இது முக்கியமான முதல் அடியாகும்.

இரண்டாவது அல்லாஹ்வுக்கு பிடித்த காரியங்களுள் ஒன்று அல்லாஹ் எவ்வி-யங்களில் எவருக்கு உங்களை பொறுப்பாளராக ஆக்கியுள்ளானோ அவருக்கு நன்மை செய்ய வேண்டும். யார் கண்காணிப்பாளராக, பொறுப்பாளராக ஆக்கபடுகின்றார்?

ஜமாஅத் அமைப்பில் இருந்து நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு பொறுப்பாளரும், ஒரு குறிப்பிட்ட பணியில் அமர்த்தப்பட்டவரும் கண்காணிப்பாளர் ஆவர். அவர்களுடன் முழுமையான ஒத்துழைப்பு நல்குவது ஒரு முஃமினுடைய கடமையாகும். எவர் ஒருவர் அல்லாஹ்வின் விருப்பத்தை பெற்று இறையன்பை பெற விரும்புகிறாரோ அவருக்கு ஒரு முக்கியமான வி-யத்தில் கட்டுப்படுமாறு கூறப்பட்டால், கீழ்ப்படியாமை குறித்து எச்சரிக்கப்பட்டால் அவ்விடம் பொறுப்பாளர்களும் கூட சிந்திக்க வேண்டிய இடமாகும், பொறுப்பாளரும் பயப்பட வேண்டிய இடமாகும்.

அல்லாஹ்வின் விருப்பத்திற்காக ஒருவர் உங்களுடன் சுமூகமாக நடக்க விரும்புகிறார். உங்கள் நலனை விரும்புகிறார். பிறகு நீங்களும் இறையச்சத்துடன் நீதியின் நாட்டத்தை நிறைவேற்றி பொறுப்பாளரின் கடமையை நிறைவேற்ற வேண்டும். சுமூக உறவு பரஸ்பரம் நன்மை நாடுதல் என்பது ஒருபக்கத்து செயலன்று. மாறாக நிய்யத் சுத்தமாக இருந்தால்தான் நீதியும் உயர்வானதாக இருக்கும். பொறுப்பாளர்களுக்கும் அல்லாஹ்வின் திருப்தி கிடைக்கும். அவர்களின் கீழுள்ளவர்களும் அந்நிலையில்தான் இறைதிருப்திக்காக பொறுப்பாளருடன் சுமூக நட்பும் நலனும் நாடுபவராக இருப்பார். தப்பெண்ணம் விலகும். அன்பு அதிகரிக்கும்.

பிறகு கூறினார்கள்: அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாக பற்றிப்பிடியுங்கள். பிரிவினை வேண்டாம். பிறகு பொதுவாக முஃமின்களுக்கு கவனமூட்டபடுகிறது. பொறுப்பாளர்கள் தரப்பிலிருந்து உங்களுக்கு ஏதாவது விரும்பதகாத வி-யங்கள் நேர்ந்து விட்டால், உங்கள் தரப்பிலிருந்து வி-மம் அல்லது குழப்பத்துக்கு காரணமாக அமைகின்ற எந்த எதிர் நடவடிக்கையும் கூடாது. பொறுப்பாளர்களுக்கும் இதில் ஒருவழிகாட்டல் உண்டு. உங்களது எதிர்நடவடிக்கையில் இறையச்சம் தான் வெளிப்பட வேண்டும். அல்லாஹ்வின் கயிறு நற்செயல்களால் உருவாக்கப்பட்டது. இதனை உங்கள் தீய செயல்களால் பலஹீனமாக்கிவிடாதீர்கள். இதனால் அக்கயிறு அறுந்துவிடவோ அல்லது கை நழுவி நெருப்பில் வீழ்ந்துவிடவோ சாத்தியமுண்டு.

அல்லாஹ்வின் நண்பர்கள் இறைவனின் திருப்திக்காக நண்பர்களின் கையை பிடித்து அவர்களையும் காப்பாற்ற முயலுகின்றனர்.

பிறகு கூறினார்கள்: வெறுக்கத்தக்க காரியத்தில் இருந்து விலகி விடுங்கள். அவை இறைவனைவிட்டு தூர விலக்கி விடுகின்றன. வீண்பேச்சு, பிறர்மீது எப்போதும் குறைகூறுதல் உருவாகிவிட்டால் அல்லாஹ்வின் கயிற்றை விட்டு கைநழுவி விடும். பிறகு அதிகமாக கேள்விகேட்டல் ஊதாரித்தனமாக செலவு செய்தல் ஆகியவையும் தடுக்கப்பட்டுள்ளது.

முஃமின் தன்னிறைவு கொள்ள வேண்டும். மார்க்கத்திற்காக பொருள்தியாகம் செய்ய வேண்டும்.

ஒரு ஹதீஸில் வருகிறது. அல்லாஹ்வின் அடியார்களுடைய இறைநட்பு குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் அடியார்களுள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நபியும் இல்லை. உயிர்தியாகிகளும் இல்லை. ஆனால் கியாமத்து நாளில் அம்மக்களின் அந்தஸ்தை கண்டு நபிமார்களும், உயிர் தியாகிகளும் கூட வியந்து போய்விடுவர். ஸஹாபாக்கள் யா ரஸூலுல்லாஹ் அம்மக்கள் யார்? என்று கேட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் அன்புகாட்டுகிறார் உறவினர் என்பதற்காக அன்று. அல்லாஹ்வுக்காக

அன்புகாட்டுவார். அல்லாஹ்வின் மீது ஆணை! அவர்களின் முகத்தில் ஓர் ஒளி உள்ளது. அவர்கள் அவ்வொளியின் மீது நிலைத்து நிற்கிறார்கள். மக்கள் பயப்படுவார்கள். ஆனால் இவர்களுக்கு எந்த பயமும் இருக்காது. மக்கள் எல்லாம் கவலைப்படும்போது இவர்களுக்கு எந்த கவலையும் இருக்காது என்று கூறிவிட்டு, **அலா இன்னஅவ்லியா அல்லாஹி லா கவ்புன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன்** (நன்றாக கேளுங்கள். அல்லாஹ்வின் வலிமார்களுக்கு எந்த பயமும் இல்லை, கவலைப்படவும் மாட்டார்கள்) என்ற வசனத்தை ஓதிக்காட்டினார்கள். அல்லாஹ்வின் வலியாக ஆகிவிட்டவர்களின் உட்கார்தல், எழுதல் அனைத்தும் இறைவிருப்பத்திற்காகவே ஆகிவிடுகின்றது. அல்லாஹ்வின் விருப்பத்திற்காக எல்லா நன்மைகளையும் செய்யும்போது நிச்சயமாக நபிமார்களும் பார்த்து வியக்கின்றனர்.

அல்லாஹ் அவர்களை பின்பற்றுபவர்களில் இருந்தும் அத்தகைய நன்மை செய்வோரை உருவாக்குகிறான். நபிமார்கள் உருவாக்கப்படுவது ஓர் ஆன்மீக புரட்சி ஏற்படுத்துவதற்காகவே. எனவே அவர்களைப் பின்பற்றியவர்களை தமக்குள் ஓர் புரட்சியை ஏற்படுத்தும்போது நிச்சயமாக அது நபிமார்களும் கண்டு வியக்கும் வி-யமாகவே அமையும். அதுவன்றி நபிமார்கள் நற்செயல் செய்து இறைவனின் உன்னத பதவியை ஏற்கனவே பெற்றுவிட்டார்கள். எனவே அம்மக்களின் நன்மைகளைப் பார்த்து வியந்துபோய் விடுவதல்ல. மாறாக தம்மை பின்பற்றிய அம்மக்களைப் பார்த்து மகிழ்ந்து வியக்கின்றனர்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று நபிமார்களுக்கு ஓர் உயர்தகுதி உள்ளது. அவற்றில் மிக உயரிய தகுதி ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) உடையதாகும். இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோற்றத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) உம்மத்தில் இணைந்து அல்லாஹ்வின் திருப்திக்காக ஒவ்வொருகாரியமும் செய்பவர்களாக விளங்குபவர்களேஅல்லாஹ்வின் வலிமார்கள் ஆவர். இதன் காரணத்தால் அவர்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுகின்றனர். அவர்களின் ஒவ்வொரு பயத்தையும் கவலையையும் அல்லாஹ் அகற்றிவிடுகின்றான். அல்லாஹ்வின் திருப்தி ஒருவருக்கு இலக்காகிவிட்டால், அவருக்கு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) ஆகிவர்களின் கட்டளையின் மீது கவனம் ஏற்படும். அது ஒரு உண்மையான முஃமினின் பணியாகும்.

கடைசி காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதும் அல்லாஹ்வின் தூதரின் கட்டளைகள் ஒரு கட்டளையாகும். ஹதீஸில் வருகிறது பிரிவினை செய்யாதீர்கள். அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாக பற்றி பிடியுங்கள். இவை அனைத்தும் தனித்தனி பிரிவாக பிரிவதை தடுக்கின்றது. இறைவனால் அனுப்பப்பட்டவற்றை தவிர வேறு எதுவும் உங்களிடம் இருக்கக்கூடாது.

இவையனைத்து தகுதியையும் அந்த வலிமார்கள் பெற்றுவிட்டனர். தற்காலத்தில் ஒரு கையில் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் அன்பு நேசம் காட்டுதல், ஒரே கையில் ஒன்றுகூடி ஒவ்வொரு பயத்தில் இருந்தும் பாதுகாப்பில் வருதல் அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) உடைய ஜமாஅத்துக்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பாகும். அவ்வாறே இருக்கவும் வேண்டும்.

இந்த இடத்தில் ஜமாஅத்திற்கு வெளியில் இருப்பவர்கள் சிந்திக்க வேண்டும். அதே வேளையில் அஹ்மதிகளும் கவனம் செலுத்த வேண்டிய இடமாகும். இறைவனது திருப்தியை பெற வேண்டும். அன்பு நேசம் ஜமாஅத் அமைப்புக்கு கண்ணியம் செய்தல், கட்டுப்படுதல் ஜமாஅத்துடன் உறுதியாக தொடர்பு கொள்தல் ஆகியவை மிகவும் அவசியமாகும்.

மேலும் அடுத்த வசனத்தில் கூறுகிறான். அத்தகைய மக்களுக்கு நற்செய்தி உண்டு. அவர்களுக்கு இவ்வுலக வெகுமதிகள் மட்டுமின்றி மறுவுலக வெகுமதிகளும் உண்டு. நிச்சயமாக இந்த வெகுமதிகளை பெறுவது ஒரு முஃமினைப் பொறுத்தவரை அவர்தம் பிறப்புநோக்கத்தை அடையப்பெறுவதாகும். மகத்தான வெற்றியாகும். இந்த நற்செய்தி எப்படி கிடைக்கும்? இதற்கு என்ன பொருள் என்பது பற்றியும் ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்: லஹுமல் பு-ரா ஃபில் ஹயாதித்துன்யா வல் ஆகிரா (அவர்களுக்கு இவ்வுலகிலும், ஆகிரத்திலும் நற்செய்தி உண்டு) என்ற வசனத்தில் வருகின்ற புஷ்ரா (நற்செய்தி)

என்ற சொல்லுக்கு பொருள்: நல்ல கனவுகள் ஆகும். ஒரு முஃமின் அந்த நல்ல கனவுகளில் தன்னைப் பற்றி பார்க்கிறார் அல்லது அவனைப் பற்றி மற்றவர்கள் காண்கிறார்கள். இதேபோன்று ஒரு ரிவாயத்தில் வருகிறது. ஆகிரத்தைப்பற்றி நற்செய்தி எமக்கு தெரியும். அது ஜன்னத் ஆகும். இவ்வுலகின் நற்செய்தி என்ன? என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது நபி (ஸல்) கூறினார்கள். நல்ல கனவுகள். இறைஅடியார்களுக்கு அவை காட்டப்படுகின்றன. அல்லது அவர்களைப் பற்றி மற்றவர்களுக்கு காட்டப்படுகின்றன. இந்த நற்கனவுகளில் நற்செய்திகள் தரப்படுகின்றன. இந்த கனவுகள் பொருளற்றவையன்று. சில வேளைகளில் அமைதியின்மையில் இருந்து அமைதியை நோக்கி வருவது பற்றி காட்டப்படுகின்றன. பிறகு அல்லாஹ் அதனை நிறைவேற்றுகின்றான். அமைதியற்ற நிலையை அபயமாக மாற்றி விடுகின்றான். சில வேளை வெகுமதிகளை அவர்கள் பெறுவது பற்றி காட்டப்படுகின்றன. தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஜமாஅத் அளவிலும் அல்லாஹ் அதனை நிறைவேற்றுவதை அவர் காண்கிறார். இவ்வாறு நடக்கும் என்பதை அல்லாஹ் பலமுறை முஃமின்களிடம் முன்னரே தெரிவித்துவிடுகிறான். அவ்வாறே நடக்கவும் செய்கிறது. எனவே நற்செய்தி தரும் கனவுகளில் இருந்து அல்லாஹ்வின் அருள் தெளிவாகிறது. அது முஃமின்களுடனும் இருக்கிறது.

ஆகவே முஃமின்களின் ஜமாஅத்தின் ஒவ்வொரு செயலும் இறைதிருப்தியை பெறுவதற்காகவே அமைகின்றது. பிறகு இவர்கள் அனைவரும் ஒரு ஜமாஅத் ஆகி, இறைவனின் நட்பை பெற முயலுகின்றனர். இறைதிருப்தியை பெறுவதற்காக அவர்கள் பரஸ்பரம் கொண்ட நட்பின் காரணத்தால் நற்செய்திகள் கிடைக்கின்றன. இன்று நமக்கு இந்த அன்பு நம்மை ஒரு புதிய உறவாக ஆக்கிவிட்டது.

அல்லாஹ் அதனை உறுதிப்படுத்துவதற்காக நல்ல கனவுகளை காட்டுகின்றான். இந்த உறவு வேரூன்றி இருக்கும் வரை இறைவனது நல்ல கனவுகளில் இருந்து பங்குபெற்றுக் கொண்டு இருப்போம். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வின் நற்செய்தி முஃமின்களுக்கு மிகப் பெரும் வெற்றியை அறிவித்துக் கொண்டே இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்: ஈமான் உடைய மக்கள் இவ்வுலக வாழ்விலும் ஆகிரத்திலும் அகப்பார்வையின் அடையாத்தை பெற்றுக்கொண்டிருப்பர். இதன்மூலம் இவ்வுலகிலும் ஆகிரத்திலும் இறைஞானத்தின் களத்தில் முன்னேறிக் கொண்டே செல்வர். இது இறைவனின் வார்த்தைகள். ஒருபோதும் பின் வாங்குபவையன்று.

அகப்பார்வையை பெறுவதே **ஃபவ்ஸே அழீம்** (மகத்தான வெற்றி) ஆகும். அதுவே யகின் (நிச்சய உறுதி மற்றும் இறைஞானத்தின் அதிகபட்ச தகுதியை சென்றடைய வைப்பதாகும். இந்த நுட்பத்தை அல்லாஹ் நமக்கு புரிய வைப்பானாக. ஈமான் மற்றும் தக்வாவை இறைஞானம் இறை நேசம் ஆகியவற்றில் முன்னோக்கி அடியெடுத்து வைக்கத்தக்கதாக ஆக்கி விடுவானாக. அவனது திருப்தியின் ஜன்னத்தில் நுழைவோமாக. நமது ஒவ்வொரு பயத்தையும் பாதுகாப்பாக அல்லாஹ் மாற்றி விடுவானாக. நமது பாவங்கள் அனாச்சாரங்களை தனது ரஹ்மத்தின் போர்வையால் மூடி நமது கவலைகளை நிரந்தரமாக அகற்றி விடுவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★


JUMUA KUTHBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL FUTUH MOSQUE, LONDON

ON 13.11.2009

Translated by : **Muallim M. NIZAMUDDIN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**



ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**